தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
செப்டம்பர் 06, 2010 இதழுடன் இணைப்பு

பயர்பாக்ஸ் தரும் பனோரமா டேப் மேனேஜர்

இலவச எழுத்துக்கள் தரும் இணைய தளங்கள்

விளக்கொளியுடன் கீ போர்ட்

அப்போதைய ஹிஸ்ட்ரியை நீக்க

திரையில் கீ போர்ட்

பல வேளைகளில் கம்ப்யூட்டருடன் இணைக்கப் பட்டுள்ள கீ போர்டில் டைப் செய்வது ஆபத்தில் முடிகிறது. நீங்கள் என்ன டைப் செய்கிறீர்கள் என்பதனை, நீங்கள் அழுத்தும் கீகளை வரிசையாகப் பெற்று அறிவிக்கும் கீ லாக்கர்கள் புரோகிராம் கள், இணையத்தில் நிறைய கிடைக் கின்றன. இதனைக் கம்ப்யூட்டர்களில் பதிந்து வைத்தால், ஒருவர் டைப் செய்திடும் இமெயில் முகவரி, பாஸ்வேர்ட், வங்கி அக்கவுண்ட் தகவல்களைப் பெற்று, திருட்டுத் தனமாக அவற்றைப் பயன்படுத்த முடியும். மேலும் பல ஸ்பைவேர் புரோகிராம்கள் இது போல கீ போர்டில் அழுத்தப்படும் கீகளை அறியும் நோக்கத்துடனேயே தயார் செய்யப் பட்டு, நம்மை அறியாமலேயே நம் கம்ப்யூட்டர்களில் பதிக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் நம் தகவல்களை அந்த புரோகிராம்கள் அனுப்பி யவர்களின் கம்ப்யூட்டருக்குச் செல்லும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. என்னதான் நாம் ஆண்ட்டி வைரஸ், பயர்வால், ஸ்பைவேர் புரோகிராம்களை பதித்து வைத்து இயக்கினாலும், அவற்றையும் மீறிக் கொண்டு இந்த ஸ்பைவேர் புரோகிராம்கள் நம் கம்ப்யூட்டருக்குள் நுழைகின்றன.

இதனால் தான் வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் மற்றும் ரகசிய தகவல்களைக் கையாளும் அமைப்புகள், தங்கள் தளங்களிலேயே விர்ச்சுவல் கீ போர்டு ஒன்றைத் திரையில் தருகின்றன. இந்த விர்ச்சுவல் கீ போர்டு மூலம் நம் யூசர் நேம், பாஸ்வேர்ட் மற்றும் பிறர் அறியக்கூடாத தகவல்களை டைப் செய்திடலாம். இவற்றின் மூலம் டைப் செய்திடுகையில், மேலே குறிப்பிட்ட ஸ்பைவேர் புரோகிராம்கள், கீ அழுத்தங்களைப் பின்பற்ற முடியாது.

அப்படி எனில், நமக்கு நிரந்தரமாக ஒரு விர்ச்சுவல் கீ போர்டினை வைத்துக் கொள்ள முடியுமா என்று நாம் எதிர்பார்க்கலாம். அப்படி ஒரு விர்ச்சுவல் கீ போர்ட், யூசர் ஸ்கிரிப்ட் விர்ச்சுவல் கீ போர்ட் (UserScript Virtual Keyboard) என்ற பெயரில் கிடைக்கிறது. திரையில் வைத்து இதனை மிக வேகமாகவும் எளிதாகவும் இயக்க முடிகிறது. தற்போதைக்கு டெக்ஸ்ட் பீல்ட், பாஸ்வேர்ட் பீல்ட், சார்ந்த டெக்ஸ்ட் ஏரியா ஆகியவற்றில் இதன் மூலம் சொற்களை அமைக்க முடிகிறது. பிரவுசர்களில் முகவரிகளை இதனைக் கொண்டு அமைக்க முடியாது. இதனை பதிந்துவிட்டு, இணைய தளம் ஒன்றில் மேலே குறிப்பிட்ட பீல்டுகளில் கர்சரைக் கொண்டு சென்று மூன்று முறை கிளிக் செய்தால், இந்த விர்ச்சுவல் கீ போர்டு கிடைக்கிறது. டெக்ஸ்ட் பீல்டுக்குக் கீழாகவே இது காட்டப்படுகிறது. அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி அல்லது ஜப்பானியர்கள் பயன்படுத்தும் வெவ்வேறு கீ போர்டுகளின் வடிவமைப்புகள் இதில் கிடைக்கின்றன. தேவையானதைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். பயர்பாக்ஸ் மற்றும் குரோம் பிரவுசர்களில் இது இயங்குகிறது. இதனைப் பெற http://user-scripts.org/scripts/show/10974 என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் செல்லவும்.

உள்ளே

2038ல் கம்ப்யூட்டர் பிரச்னை பக்கம் 3
விளக்கொளியுடன் கீ போர்ட் பக்கம் 6
விண்டோஸ் எக்ஸ்புளோரர் கூடுதல் வசதிகள் பக்கம் 10

வாசகர்களே...

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துக்களை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளை குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல், 'சி.டி.'க்களை கம்ப்யூட்டர் மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

2010 மார்ச் பிறகு உள்ள 'சிடி'க் களை மட்டும் அனுப்பவும். 'சி.டி.' யை உருவாக்கியவர், தயாரித்த நிறுவனம், விலை, வெளியிட்ட நாள், கிடைக்கும் இடம் ஆகியவற்றை குறிப்பிடவும்.

தினமலர் – கம்ப்யூட்டர் மலர், 8, காசா மேஜர் ரோடு, எழும்பூர், சென்னை 600 008.

computermalar@dinamalar.in

2038ல் கம்ப்யூட்டர் பிரச்னை

2000 ஆண்டு தொடங்கும் முன்னால், Y2K என்று ஒரு பிரச்னை அனைத்து ஊடகங்களிலும் பேசப்பட்டது. கம்ப்யூட்டரில் உள்ள புரோகிராம்கள், 2000 ஆண்டு தொடங்கும்போது தவறாக தேதியைக் கணக்கிடத் தொடங்கும் என்றும் இதனால் உலகெங்கும் பல பிரச்னைகள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன என்றும் பேசப்பட்டது. பல நிறுவனங்கள் தற்காப்பு நடவடிக்கையாகப் பல வழிகளைக் கையாண்டனர். இறுதியில் எதிர்பார்த்த இழப்புகள் ஏற்படவில்லை. அதற்கான தேவையான மாற்றங்களைப் பல நிறுவனங்கள் தாங்களாக மேற்கொண்டனர்.

இப்போது இன்னொரு பிரச்னை எதிர்பார்க்கப்படுகிறது. இது 2038 ஆம் ஆண்டில் ஏற்படும் என அறியப்பட்டுள்ளது. இந்த பிரச்னை Unix Millennium Bug, Y2K38 அல்லது Y2.038K என அழைக்கப்படுகிறது.

இந்த பிரச்னைக்குக் காரணம் சி புரோகிராமிங் மொழியில் பின்பற்றப்படும் ஒரு செயல்பாடுதான். சி புரோகிராம் ஸ்டாண்டர்ட் டைம் லைப்ரரி என்று ஒரு கோட்பாட்டினைப் பின்பற்றுகிறது. இதில் நேரமானது 4 பைட் பார்மட்டில் கணக்கிடப்படுகிறது. இதனைப் பயன்படுத்தி நேரத்தின் மதிப்பு கணக்கிடப்படுகிறது. அதன் அடிப்படையில் கணக்கீடுகள், மாற்றங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

இந்த 4 பைட் ஸ்டாண்டர்ட் நேரத்தைக் கணக்கிடுகையில், நேரத்தின் தொடக்கத்தினை ஜனவரி 1, 1970 12:00:00 முற்பகல் ஆக எடுத்துக் கொள்கிறது. இந்த நேரத்தில் நேர மதிப்பு 0 எனத் தொடங்கப்படுகிறது. எந்த ஒரு நேரம் மற்றும் தேதியின் மதிப்பு இந்த 0 மதிப்பிற்குப் பின்னர் விநாடிகளின் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். எனவே, எடுத்துக் காட்டாக 919642718 என்ற மதிப்பு ஜனவரி 1, 1970 12:00:00 முற்பகலுப்பின் 919642718 விநாடிகள் எனக் கணக்கிடப்படும். அப்படிக் கணக்கிடப்படுகையில் விடை ஞாயிறு, பிப்ரவரி 21, 1999 16:18:38 எனக் கிடைக்கும். இது ஒரு வசதியான கணக்கீடு. ஏனென்றால் இரண்டு மதிப்புகளை விநாடிகளில் கணக்கிட்டு இதன் மூலம் நேரம் மற்றும் நாளினைக் கையாள முடிகிறது. இதன் மூலம் இரு வேறு நேரம், நாள், மாதம் ஆண்டுகளைக் கையாள முடியும்.

ஆனால் ஒரு 4 பிட் இன்டிஜர் வழியைப் பின்பற்றுகையில் அதன் வழி சொல்லப்படக் கூடிய அதிக பட்ச மதிப்பு 2,14,74,83,647ஆகும். இங்கு தான் ஆண்டு 2038 என்ற பிரச்னை எழுகிறது. இந்த மதிப்பை நாள் கணக்கில் பார்க்கையில், அது ஜனவரி 19, 2038 03:14:07 ஆக மாறுகிறது. இந்த நாள் அன்று, சி புரோகிராம்கள் நேரம் கணக்கிடுவதில் திணற ஆரம்பிக்கும். ஏனென்றால் இதற்குப் பின்னர் இந்த புரோகிராம்கள்

நெகடிவ் நேரம் காட்டத் தொடங்கும்.

புரோகிராம் எழுதத் தெரிந்தவர்கள், கீழ்க்காணும் சி புரோகிராம் ஒன்றை எழுதி இயக்கிப் பாருங்கள். உங்களுக்கு இதன் பொருள் தெரியும்.

```
01.#include <stdlib.h>
02.#include <stdio.h>
03.#include <unistd.h>
04.#include <time.h>
05.
06.int main (int argc, char **argv)
07.{
08.  time_t t;
09.  t = (time_t) 1000000000;
10.  printf (“%d, %s”, (int) t, asctime (gmtime (&t)));
11.  t = (time_t) (0x7FFFFFFF);
12.  printf (“%d, %s”, (int) t, asctime (gmtime (&t)));
13.  t++;
14.  printf (“%d, %s”, (int) t, asctime (gmtime (&t)));
15.  return 0;
16.}
```

இந்த புரோகிராமின் அவுட்புட்

1.1000000000, Sun Sep 9 01:46:40 2001
2.2147483647, Tue Jan 19 03:14:07 2038
3.-2147483648, Fri Dec 13 20:45:52 1901

என அமையும்.

இந்த பிரச்னையை சாப்ட்வேர் கட்டமைப்பைத் திருத்துவதன் மூலம் தீர்த்துவிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பழைய Y2K பிரச்னை போல பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாமல் தடுத்துவிடலாம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

சிலர், ஐ.பி.எம். வகை பெர்சனல் கம்ப்யூட்டர்களில் இந்த பிரச்னை 2016 ஆம் ஆண்டிலேயே வரும் எனக் கணித்துள்ளனர். ஏனென்றால் இந்த வகைக் கம்ப்யூட்டர்களில் நேரமானது ஜனவரி 1,1980 எனத் தொடங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வகைக் கம்ப்யூட்டர்களைத் தான் நம்மில் பெரும்பாலோனோர் பயன்படுத்தி வருகிறோம்.

விண்டோஸ் என்.டி. சிஸ்டம் பயன்படுத்தும் கம்ப்யூட்டர்களில் இந்த பிரச்னை இப்போதைக்கு இல்லை. ஏனென்றால் அவற்றில் நேரத்தைக் கணக்கிட 64 பிட் இன்டிஜர் அடிப்படையாக உள்ளது. மேலும் அதன் கணக்கீடு 100 நானோ நொடிகளை அடிப்படையாகக் கொண்டது. அதன் நேரம் ஜனவரி 1, 1601 என்பதால், 2184ல் தான் என்.டி. சிஸ்டங்களில் இந்த பிரச்னை ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

இந்த பிரச்னை குறித்து ஆப்பிள் நிறுவனம் கூறுகையில் தன் கம்ப்யூட்டர்களில் இந்த பிரச்னைக்கு இடம் இல்லை எனத் தெரிவித்துள்ளது. இப்போதைக்கு உள்ள நிலையில், கணக்கீட்டின் அடிப்படையில், மேக் கம்ப்யூட்டர்களில் இந்த பிரச்னை 29,940 ஆம் ஆண்டில் தான் ஏற்படுமாம்.

அந்தப் பக்கம் மட்டும் அச்சடிக்க

வேர்ட் டாகுமெண்ட் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பார்த்துக் கொண்டிருக்கும் பக்கம் மட்டும், அதனை மட்டும், பிரிண்ட் எடுக்க வேண்டும் என்றால் என்ன செய்யலாம். பைல் மெனு சென்று பிரிண்ட் கொடுத்து, கிடைக்கும் விண்டோவில் current page செலக்ட் செய்து என்டர் அழுத்தும் வேலையைக் குறைக்கும் வழி ஒன்று உள்ளது. பிரிண்ட் எடுக்க வேண்டிய பக்கத்தில் கர்சரை வைத்துக் கொண்டு பின் Ctrl + P மற்றும் Alt + E அழுத்தவும். அந்தப் பக்கம் மட்டும் பிரிண்ட் ஆகும்.

இது என்ன தெரியுமா?

விமானத்தில் ஏற்றப்படும் இந்த சாதனம் என்ன? சரியாகத் தெரியவில்லை என்றாலும், சும்மா ஒரு அனுமானத்தில் தான் எண்ணிப் பாருங்களேன். விடை 10 ஆம் பக்கத்தில்

பயர்பாக்ஸ் தரும் பனோரமா டேப் மேனேஜர்

வர இருக்கும் பயர்பாக்ஸ் பிரவுசர் தொகுப்பு 4ன், நான்காவது சோதனைத் தொகுப்பு வெளியாகியுள்ளது. இதில் பிரவுசரில் உள்ள டேப்களைக் கையாள்வதற்கு பனோரமா என்னும் டேப் நிர்வாக வசதி தரப்பட்டுள்ளது இதன் ஒரு சிறப்பாகும். இதன் மூலம் டேப்களில் உள்ள தளங்களைச் சிறிய காட்சிகளாகக் கண்டு, அவற்றை எளிதாகப் பயனாளர்கள் கையாள முடியும்.

இப்போதைய நிலையில் பயர்பாக்ஸ் பிரவுசரில், அதிகமான எண்ணிக்கையில் டேப்கள் திறக்கப்படுகையில், எதில் எந்த தளம் உள்ளது என்ற குழப்பம் நமக்கு ஏற்படுகிறது. ஒரு தளத்தின் தொடர்பு தளங்கள் திறக்கப்படுகையில், அவை டேப் அளவில் ஒன்றாகவே தெரிகின்றன. இந்த சிக்கலைத் தீர்க்க, அவற்றைக் காட்சித் தோற்றமாக இந்த புதிய வசதி காட்டுகிறது.

டேப்கள் இப்போது மேக் கம்ப்யூட்டர் சிஸ்டத்தில் உள்ள எக்ஸ்போஸ் (Expose) போலக் காட்சி அளிக்கின்றன. முன்பு இந்த வசதி டேப் கேண்டி (Tab Candy) என அழைக்கப்பட்டது. மிக அதிகமான எண்ணிக்கையில் பல்வேறு தளங்களை, டேப்கள் மூலம் பயன்படுத்துபவர்களுக்கு இந்த வசதி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

தளங்களை குழுவாகவும் பிரித்து இணைத்து வைத்துப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு டேப்பும் ஒரு சிறிய படமாகக் காட்சி அளிக்கிறது. இவற்றைக் குழுவாக ஒரு சிறிய சதுரத்தில் அடைக்கலாம். இந்த சதுரங்களையும் அவற்றில் உள்ள டேப்களையும் மாற்றிக் கொள்ளலாம். இந்த காட்சித் தோற்றத்தின் மூலம் எந்த தளம் எந்த டேப்பில் திறக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

பனோரமா தோற்றத்தினை, வலது மேல் மூலையில் உள்ள பட்டனை அழுத்திப் பெறலாம். இது “Feedback” பட்டனுக்குச் சற்று மேலாகத் தரப்பட்டுள்ளது.

இந்த வசதி இப்போது ஆப்பரா பிரவுசரில் கிடைக்கிறது. தற்போது பிரவுசர் தொகுப்பு களுக்கிடையே ஏற்பட்டுள்ள போட்டியினால், பயர்பாக்ஸ் பிரவுசரில் இந்த வசதி சற்று மேம்படுத்தலுடன் தரப்பட்டுள்ளது.

அடுத்த வசதி Firefox Sync. இது முன்பு Weave என அழைக்கப்பட்டு வந்தது. இதன் மூலம் உங்களுடைய பாஸ்வேர்ட், புக் மார்க், ஹிஸ்டரி, படிவத்திற்கான தகவல்கள், திறக்கப்பட்டுள்ள டேப்கள், மற்றும் இவை உள்ள பட்டைகள், இணைக்கப்படும் ஐபோன் போன்ற சாதனங்கள் குறித்த தகவல் குறிப்புகளை, ஒருங்கிணைத்துப் பெறலாம். இந்த வசதி ஏற்கனவே ஓர் ஆட் ஆன் தொகுப்பு மூலம்



தரப்பட்டு வந்தது. இதனைப் பலரும் விரும்பிப் பயன்படுத்தியதாலும், அதிகப் பயன் கொண்டதாக இருந்ததாலும், மொஸில்லா இதனை, பயர்பாக்ஸ் தொகுப்பின் ஓர் அங்கமாகத் தற்போது தந்துள்ளது. ஆனால் இந்த வசதியினைப் பயன்படுத்த, உங்களுக்கு Firefox Sync அக்கவுண்ட் ஒன்று வேண்டும். அப்போது தான், உங்கள் தகவல்கள் அனைத்தையும், எங்கிருந்து வேண்டுமானாலும் நீங்கள் பயன்படுத்த முடியும். இது தற்போது அதிகம் பேசப்பட்டு வரும் கிளவுட் கம்ப்யூட்டிங் போலச் செயல்படும் வசதி ஆகும். இது குறித்த மேலதிகத் தகவல்களுக்கு http://www.mozilla.com/firefox/sync/ என்ற முகவரியில் உள்ள தளத்தினைப் பார்க்கவும்.

இணைய உலாவிப் பதிப்புகள் அனைத்துமே, தற்போது கண்களையும் மனதையும் கவர்ந்திழுக்கும் வண்ணம் அமைக்கப்படுகின்றன. அதற்கேற்ற வகையில், ராம் மெமரி, கிராபிக்ஸ் கார்டு திறன் மற்றும் இணைந்த, இயைந்த சாதனங்கள் கிடைக்கின்றன. பயர்பாக்ஸ் சோதனைத் தொகுப்பு 4ன் இந்த வசதிகள் இவற்றை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டிருக்கின்றன. நீங்களும் இதனை இன்ஸ்டால் செய்து பயன்படுத்திப் பார்த்து மகிழலாம். உங்கள் கருத்தினை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

இந்த தொகுப்பினை http://www.mozilla.com/en-US/firefox/all-beta.html/ என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து இலவசமாக டவுண்லோட் செய்திடலாம். இந்த தொகுப்பு உலகின் 35 மொழிகளில் கிடைக்கிறது.

விளக்கொளியுடன் கீ போர்ட்

இருட்டில் மற்றவர்களுக்குத் தொல்லை தராமல், பயன்படுத்தக் கூடிய கம்ப்யூட்டர் கீ போர்டினை, லாஜிடெக் நிறுவனம் தயாரித்துள்ளது. கே 800 என இது அழைக்கப்படுகிறது. இந்த கீ போர்டுக்குள்ளாக, கீகளை நன்கு அறியும் வண்ணம் பின்புறத்திலிருந்து வெளிச்சம் தரும் வகையில் விளக்கு உள்ளது. அறையின் ஒளிக்கேற்ற வகையில் இதன் ஒளி மாறுகிறது. கைகள் இதன் அருகே செல்கையில், ஒளிர்ந்து மற்ற நேரத்தில் இல்லாமலும் இந்த விளக்குகள் இயங்குகின்றன. இந்த விளக்கிற்கான மின்சக்தி, கம்ப்யூட்டருடன் இணைக்கப்பட்டுள்ளதன் மூலம் கிடைக்கிறது. இதில் உள்ள பேட்டரி ரீசார்ஜ் செய்யப்படுகிறது.

இந்த கீ போர்டின் வடிவம் மிகவும் ஸ்லிம்மாக உள்ளது. கூடுதல் வசதியாக வழக்கமான உள்ளங்கை அடிப்பக்கம் வைத்திட இடம் தரப்பட்டுள்ளது. யு.எஸ்.பி. போர்ட்டில் இணைத்து இதனைப் பயன்படுத்தலாம். மின்னஞ்சல், இணைய உலா மற்றும் மல்ட்டி மீடியா பயன்பாடுகளுக்கென தனி கீகள் தரப்பட்டுள்ளன. விண்டோஸ் 7, விஸ்டா மற்றும் எக்ஸ்பி சிஸ்டங்களுடன் இணைந்து இது இயங்குகிறது.

இதன் நான்கு புறங்களிலும் பிளாஸ்டிக்கினால் ஆன பார்டர் தரப்பட்டுள்ளது. இதன் தடிமன் 9.3 மிமீ தான். இதன் உள்ளங்கை அமர்ந்திடும் இடத்தில் சிறிய ரப்பர் ஷீட் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் உறுதியாகக் கரங்களை இதில் வைத்துப் பயன்படுத்த முடிகிறது. இதனால் உங்கள் கைகள் டைப் செய்திடுகையில் வழுகிச் செல்லாது. கை ரேகைகள் கீ போர்டில் பெரிதாகத் தெரியாது.

இதன் ஒவ்வொரு கீயிலும் மைக்ரோ லென்ஸ் ரெப்ளக்டர் உள்ளது. இதனால் ரம்மியமான நீல நிற ஒளி கிடைக்கிறது.

இதனை யு.எஸ்.பி. போர்ட்டில் இணைத்துப் பயன்படுத்தலாம். எந்தவிதமான இன்ஸ்டலேஷனும் தேவையில்லை. ஆனால் இதன் மேலாகத் தரப்பட்டுள்ள 12 ஸ்பெஷல் கீகளுக்கான செயல்பாடுகளை மேற்கொள்ள, இதனுடன் வரும் 4.6 கேபி அளவுள்ள இன்ஸ்டலேஷன் பைலை இயக்கிப் பதிய வேண்டும்.

இதன் இரு கீகளுக்கு இடையே 3.2 மிமீ இடைவெளி உள்ளது. இது கைகளுக்கு எந்த தீங்கும் ஏற்படாத வகையில் டைப் செய்திட உதவுகிறது.

இந்த கீ போர்டில் யு.எஸ்.பி. போர்ட் எதுவும் கொடுக்கப்பட வில்லை. இதனால் நேரடியாக கீ போர்டில் எந்தவிதமான பென் ட்ரைவினையும் இணைக்க முடியாது. ஒருவேளை இதனை ஸ்லிம்மாக வடிவமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இதனை விட்டிருக்கலாம். இந்த கீ போர்டு வயர் மூலம் இணைத்துச் செயல்படும் மாடலாக மட்டுமே வந்துள்ளது. வயர் வழி இணைப்பின்றி இதனைப் பயன்படுத்த முடியாது.

இரவு நேர இருட்டு ஆந்தைகள் போல கம்ப்யூட்டரில் செயல்படுவோருக்கு இந்த கீ போர்டு மிகவும் ஏற்ற ஒன்றாகும்.

இந்தியாவில் விரைவில் இது விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட உள்ளது. அமெரிக்காவில் இதன் விலை 100 டாலர்.

இலவச எழுத்துக்கள் தரும் இணைய தளங்கள்

நீங்கள் கம்ப்யூட்டரில் பணிபுரியும் டிசைனர் என்றால் நிச்சயமாக உங்கள் வேர்ட் ப்ராசசர், டி.டி.பி. சாப்ட்வேர் மற்றும் பிற தளங்கள் தரும் எழுத்து வகைகள், உங்கள் கற்பனைத் திறனுக்கு ஈடு கொடுக்க முடியாது. ஆனால் இணையத்தில் இலவசமாக எழுத்து வகைகளைத் தரும் தளங்கள் நிறைய உள்ளன. ஒரு சில தளங்களில் கட்டணம் செலுத்தியே சில எழுத்துவகைகளைப் பெற முடியும். பெரும்பாலான தளங்கள் விண்டோஸ் சிஸ்டத்துடன் மற்ற மேக் மற்றும் லினக்ஸ் தளங்களில் பயன்படுத்தும் எழுத்துவகைகளையும் தருகின்றன. இவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

1.www.fawnt.com : இந்த தளம் 9348 எழுத்து வகைகளுக்கான கோப்புகளைக் கொண்டுள்ளது. டிசைனர், டெவலப்பர்கள் மற்றும் இணையப் பக்கங்கள் அழகாக அமைய வேண்டும் என விரும்புபவர்கள் இந்த தளம் சென்று எழுத்து வகைகளைப் பெறலாம்.

2.www.abstractfonts.com : இதில் 11,849 எழுத்து கோப்புகள் உள்ளன. நம் தேவைக்கேற்ப எழுத்து வகைகளைத் தேடுவதற்கு நல்ல யூசர் இன்டர்பேஸ் தரப்பட்டுள்ளது.

3. www.freefonts.co.in : இந்திய இணைய தளம். இதில் 12,000க்கு மேற்பட்ட எழுத்துவகைக் கோப்புகள், அனைத்து ஆப்பரேட்டிங் சிஸ்டங்களுக்கும் தரப்பட்டுள்ளன.

4. www.dafont.com : இதில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட எழுத்துவகைகள் கிடைக்கின்றன. அனைத்தும் இலவசமே. எளிதாகத் தேடி அறிந்து எடுத்துக் கொள்ள சிறப்பாக வழி காட்டும் மெனு உள்ளது.

5. : ஏறத்தாழ 8,000 எழுத்து வகைக் கோப்புகளுக்கும் மேலாக இதில் கிடைக்கின்றன. அனைத்தும் சரியான முறையில் பிரித்து வைத்துக் காட்டப்படுகின்றன. அகரவரிசைப்படியும் இவற்றை பிரவுஸ் செய்து தேர்ந்தெடுத்து டவுண்லோட் செய்து கொள்ளலாம்.

6. www.free–fonts.Com : இது 3ல் காட்டப்பட்டுள்ள தளம் அல்ல. முகவரியினை நன்கு கவனிக்கவும். இது எழுத்துவகை கோப்புகளுக்கு ஒரு தேடல் சாதனம் போலச் செயல்படுகிறது. இதன் தகவல் கிடங்கில் 55 ஆயிரம் எழுத்துவகைகளுக்கு மேல் காட்டப்படுகிறது. ஆனால் பிரவுஸ் செய்து பெற முடியவில்லை. எழுத்து வகையின் பெயரை நினைவில் வைத்துத் தேட வேண்டும்.

7.http://simplythebest.net/fonts/: ஆயிரக்கணக்கில் எழுத்துவகை கோப்புகளைக் கொண்டு, அவற்றைத் தரம் மற்றும் வகை பிரித்துக் காட்டுகிறது. ஒவ்வொரு எழுத்துவகையும் இலவசமா இல்லையா என்று முதலிலேயே காட்டப்படுகிறது.

மேலே கூறப்பட்ட தளங்களிலிருந்து எழுத்து வகைக்கான கோப்புகளை இறக்கி, அவை சுருக்கப்பட்ட ஸிப் பைல்களாக இருந்தால், அவற்றை விரித்துப் பின் பாண்ட்ஸ் போல்டரில் இன்ஸ்டால் செய்திட வேண்டும்.

டேப்களுடன் நோட்பேட்

இணைய உலாவித் தொகுப்புகளில் டேப்கள் பயன்பாடு கூடுதல் வசதியைத் தருவதால், அந்த வசதியை மற்ற பயன்பாட்டுத் தொகுப்புகளிலும் தரும் வகையில் அவை உருவாக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், டேப்கள் பயன்பாட்டுடன், நோட்பேட் தொகுப்பு ஒன்று இப்போது கிடைக்கிறது. என்னைப் போல, அடிக்கடி நோட்பேட் பயன்படுத்துபவர்களுக்கு, இது மிக்க மகிழ்ச்சியைத் தருவதாக அமைந்துள்ளது. ஏனென்றால், மிகக் குறைந்த வசதிகளுடன் கூடிய வேர்ட் ப்ராசசர்தான் நோட்பேட். அதில் அதிக வசதிகளை எதிர்பார்க்க முடியாது என்றாலும், அடிக்கடி இந்த சில வசதிகள் இருக்கக் கூடாதா என்ற எண்ணம், இதனைப் பயன்படுத்தும்போது நமக்கு வரும். அந்த வகையில் இந்த புதிய நோட்பேட் தொகுப்பு நமக்கு ஓரளவிற்கு நிறைவைத் தருகிறது. இதன் பெயர் Caderno.

இதில் பல டேப்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வரிகளின் எண்கள் காட்டப்படுகின்றன. INI, XML, HTML, CSS, JavaScript, PHP மற்றும் Java போன்ற புரோகிராமிங் மொழிகளுக்கென இவற்றைப் பயன்படுத்துகையில், இதன் சொற்கள் மற்றும் கட்டளைகளைத் தனியே ஹைலைட் செய்து காட்டும் வசதி தரப்பட்டுள்ளது.

கம்ப்யூட்டரில் பிரச்னை ஏற்பட்டு, நோட்பேட் கிராஷ் ஆனால், இதிலிருந்து மீண்டு வரும் வசதியும் இதில் உண்டு. யூனிகோட் எழுத்து வகைகளுக்கு சப்போர்ட் உள்ளது. டெக்ஸ்ட் பைல்களை எடிட் செய்கையில் பைண்ட் அண்ட் ரீபிளேஸ் வசதி கிடைக்கிறது.

எனவே இதனை எளிமையான முறையில் சாதாரண நோட்பேடாகவும், தேவைகளுக்கேற்ப கூடுதல் வசதிகளுடனும் பயன்படுத்தலாம். இதனைப் பயன்படுத்துகையில் நமக்கு பயர்பாக்ஸ் பிரவுசரைப் பயன்படுத்தும் அனுபவம் கிட்டுகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த புரோகிராமினை http://freddy1990.com என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து, இலவசமாக இறக்கிப் பயன்படுத்தலாம். பைலின் பெயர் caderno 2.10.1 Setup.exe. டவுண்லோட் செய்கையில் மூன்றுவித பைல்கள் தரப்படுகின்றன. அவை Normal, Portable மற்றும் U3. நம் தேவைக்கேற்ற பதிப்பினை எடுத்துக் கொள்ளலாம்.



இன்டர்நெட் எக்ஸ்புளோரர் ஷார்ட் கட் கீகள்

பழநியிலிருந்து வாசகி ஒருவர், கம்ப்யூட்டர் மலரில் பல தொகுப்புகளுக்கு ஷார்ட் கட் கீகள் தொகுப்பு போடுவதாகவும், இந்த வகையில் இன்டர்நெட் எக்ஸ்புளோரரை மறந்துவிட்டதாகவும் குற்றம் சாட்டி கடிதம் எழுதியுள்ளார். சில மாதங்களாக இதனை மறந்துவிட்டோம் என்பது உண்மைதான். இதோ அவருக்காகவும், இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசரைப் பயன்படுத்தும் மற்றவர்களுக்காகவும், சில ஷார்ட் கட் கீ தொகுப்புகளும் அவற்றின் பயன்பாடுகளும் தரப்படுகின்றன.

F1– உதவிக் குறிப்புகள் பெற

F3 - சர்ச் பேனல் திறக்கவும் மூடவும்

F4 - அட்ரஸ் பாரினைக் கீழ் இழுத்துப் பார்க்க

F5 - அப்போதைய இணையப் பக்கத்தினை மீண்டும் இறக்கிப் பார்க்க

F6 -அட்ரஸ் பார் நோக்கிச் செல்ல

F11 - முழுத்திரை பெறவும் மாற்றவும்

Alt + (Left Arrow) - ஹிஸ்டரி பட்டியலில் பின் நோக்கிச் செல்ல, பேக் ஸ்பேஸ் போல

Alt + (Right Arrow) - ஹிஸ்டரி பட்டியலில் முன்னோக்கிச் செல்ல

Ctrl + A - அனைத்தையும் தேர்ந்தெடுக்க

Ctrl + C -தேர்ந்தெடுத்த அனைத்தையும் காப்பி செய்திட

Ctrl + E - சர்ச் பேனல் பெற

Ctrl + F - இணையப் பக்கத்தில் தேட

Ctrl + H -ஹிஸ்டரி பேனலைத் திறக்க/மூட

Ctrl + I -பேவரிட்ஸ் பேனலைத் திறக்க / மூட

Ctrl + L - பைல் ஒன்றைத் திறக்க

Ctrl + P - அப்போதைய பக்கத்தினைத் திறக்க

Ctrl + R - பக்கத்தினை மீண்டும் திறந்து பார்க்க. இதுவும் எப்5 கீ போலத்தான்.

Esc - இணையத்திலிருந்து கம்ப்யூட்டருக்கு வந்து கொண்டிருக்கும் இணையப் பக்க இறக்கத்தினை நிறுத்த

Ctrl + D -அப்போது பார்த்துக் கொண்டிருக்கும் இணையப் பக்கத்தினை, பேவரிட்ஸ் பிரிவில் சேர்க்க

ஒரு சொல்லில் இரண்டு கிளிக் செய்தால் அந்த சொல் தேர்ந்தெடுக்கப்படும்.

மூன்று முறை கிளிக் செய்தால், அந்த வரி தேர்ந்தெடுக்கப்படும்.

மவுஸில் உள்ள ஸ்குரோல் வீலைக் கிளிக் செய்தால், ஸ்குரோல் செய்வது எளிதாகும்.

கண்ட்ரோல் அழுத்தி, ஸ்குரோல் வீலை முன்பக்கமாகச் சுழற்றினால், இணையப் பக்கத்தில் உள்ள எழுத்தின் அளவு பெரிதாகும். கீழ் நோக்கிச் சுழற்றினால், எழுத்தின் அளவு சிறியதாக மாறும்.

இணையப் பக்கத்தில் ஒரு இடத்தில் கிளிக் செய்த பின்னர், ஷிப்ட் கீ அழுத்திக் கொண்டு, பின்னர் இன்னொரு இடத்தில் கிளிக் செய்தால், இரு இடங்களுக்கு இடையே உள்ள, டெக்ஸ்ட் மற்றும் ஆப்ஜெக்ட்டுகள் தேர்ந்தெடுக்கப்படும்.

உலகின் அதிவேக சிப்

கம்ப்யூட்டரின் வடிவமைப்பு மட்டுமின்றி, அதன் இயக்கத்தின் அடிப்படையான சிப்களின் வேகமும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அண்மையில் ஐ.பி.எம். உலகிலேயே அதி வேகமாக இயங்கும் தன்மையுடன் கூடிய சிப் ஒன்றை வடிவமைத்து வெளியிட்டுள்ளது. Z196 ப்ராசசர் என அழைக்கப்படும் இந்த சிப், இதன் செயல்வேகத்தில் இப்போது பயன்பாட்டில் இருக்கும் அனைத்து சிப்களையும் விஞ்சிவிடுவதாக உள்ளது. இதன் கிளாக் ஸ்பீட் 5.2Ghz. ஒரு நொடியில் 5,000 கோடி கட்டளைகளைச் செயல்படுத்தும் திறன் கொண்டது. இதில் 140 கோடி ட்ரான்சிஸ்டர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இது டெஸ்க்டாப் கம்ப்யூட்டர்களுக்கு அல்ல. ஐ.பி.எம். மெயின்பிரேம் கம்ப்யூட்டர்களில் பயன்படுத்தவென உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த வார டவுண்லோட்

விண்டோஸ் எக்ஸ்புளோரர் கூடுதல் வசதிகள்

விண்டோஸ் 7 ஆப்பரேட்டிங் சிஸ்டம் இயக்கத்தில் பல புதிய மாறுதல்களை மைக்ரோசாப்ட் தந்தாலும், அதன் விண்டோஸ் எக்ஸ்புளோரர் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இல்லாமல் அப்படியே தான் இயங்கு கிறது. விஸ்டாவிலிருந்து பார்க்கையில் ஒரு சில குறிப்பிட்டுச் சொல்ல முடியாத மாற்றங்களை மட்டும் இங்கு காணலாம்.

இந்த வகையில் விண்டோஸ் எக்ஸ்புளோரரில் பல கூடுதல் வசதிகளைத் தரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது பெட்டர் எக்ஸ்புளோரர் (Better Explorer) என்னும் சாப்ட்வேர். இது தனியாகவே தன்னுடைய இன்டர்பேஸ் மூலம் பல வசதிகளைத் தருகிறது. முதலாவதாக இப்போது இன்டர்நெட் பிரவுசர்களில் காணப்படும் டேப்களை இங்கு இணைத்துப் பார்க்கலாம். டேப்கள் இல்லாமல் வழக்கம் போல கிடைக்கும் தோற்றத்தில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் செயல்பாட்டை விரும்பினால், அதனையும் பெற்றுக் கொள்ளலாம்.





இந்த சாப்ட்வேர் தொகுப்பைத் தயாரிப்பவர்கள் இன்னும் பல மாற்றங்களை விண்டோஸ் எக்ஸ்புளோரரில் கொண்டு வர முயற்சிப்பதாக, இவர்களின் தளத்தில் அறிவித்துள்ளனர். பெட்டர் எக்ஸ்புளோரர் புரோகிராமிற்கும், கூடுதல் தகவல்களுக்கும் http://bexplorer.codeplex.com/ என்ற முகவரியில் உள்ள தளத்தினை அணுகவும்.

இது என்ன தெரியுமா?

நான்காம் பக்கத்தில் காட்டப் பட்டுள்ள சாதனம் என்ன? என்ற கேள்விக்கான விடை. 1956ல் ஐ.பி.எம். நிறுவனம் பயன்படுத்திய ஒரு சாதனத்தைத்தான் இந்த புகைப்படத்தில் பார்க்கிறீர்கள். 305 RAMAC என்ற முதல் 'சூப்பர்' கம்ப்யூட்டரை ஐ.பி.எம். தயாரித்தது. அந்த கம்ப்யூட்டரின் ஹார்ட் டிஸ்க் தான் இவ்வளவு பெரிய சாதனமாகக் காட்சி அளிக்கிறது. இதன் எடை ஒரு டன்னுக்கு மேல். இதன் கொள்ளளவு 5 எம்பி மட்டுமே. நக அளவு ட்ரைவில், 8 ஜிபியுடன் பிளாஷ் ட்ரைவ் அந்தக் காலத்தில் கற்பனையில் கூட எண்ணிப் பார்த்திருக்க முடியாது.

உங்களுக்குத் தெரியுமா?

1. இணைய இணைப்பின் வேகம் 8Mb/sec என்று சொன்னால், அது வினாடிக்கு 8 மெகா பிட்ஸ் என்று பொருள். மெகா பைட்ஸ் அல்ல.

2. "Start Me Up" என்ற புகழ் பெற்ற ஆங்கில இசைப்பாடல் விண்டோஸ் 95 தொகுப்பின் விற்பனைக்குப் பயன்படுத்தப்பட்டது.

3. பெர்சனல் கம்ப்யூட்டர் ஒன்றின் முதலுதவிப் பெட்டியில் எமர்ஜென்ஸி பூட் சிடி அல்லது பிளாஷ் ட்ரைவ் இருக்க வேண்டும்.

4. அடுத்தடுத்து வேகமாக டைப் செய்கையில் தொடர்ந்து இருக்கும் கீகள் இணைந்து ஜாம் ஆகி நின்றுவிடக் கூடாது என்பதால் தான், கம்ப்யூட்டர் கீ போர்டாக குவெர்ட்டி கீ போர்டு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. உங்கள் லேப்டாப் மீது தண்ணீர், காப்பி,டீ, கூல் ட்ரிங்க்ஸ் என ஏதாவது திரவம் கொட்டிவிட்டால், உடனே மின்சக்தி வரும் ப்ளக்கினை எடுத்து மின்சக்தியை நிறுத்தவும். அல்லது பேட்டரியினை வெளியே இழுக்கவும்.

6. லேப்டாப்பின் பேட்டரி திறனை நீண்ட நாள் பாதுகாப்பாகப் பெற, திரையின் வெளிச்சத்தைக் குறைப்பது நல்லது.

7. கம்ப்யூட்டர் கேம்ஸ்களில், மிக அதிகமாக விற்பனை செய்யப்பட்டது The Sims என்ற கேம்.

8. உங்களையும் அறியாமல், உங்களிடம் உள்ள ஒரே நகல் உள்ள ஒரு கோப்பினைக் கம்ப்யூட்டரிலிருந்து அழித்துவிட்டால், உடனே ரெகுவா போன்ற, கோப்பு மீட்டுத் தரும் அப்ளிகேஷன் புரோகிராமினைப் பயன்படுத்த வேண்டும். எனவே இதனை உங்கள் கம்ப்யூட்டரில் பதிந்து வைப்பது நல்லது.

9.ஒரு பிரிண்டரை வெகுநாள் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என நீங்கள் திட்டமிட்டால், பிரிண்டரை வாங்கும் முன், ஒரு பக்கம் அதில் அச்சடிக்க எவ்வளவு செலவாகும் என்பதனையும் கணக்கிட்டுப் பார்க்கவும்.

10. "Hot-swapping" என்பது, கம்ப்யூட்டருடன் ஒரு சாதனைத்தை இணைத்துப் பயன்படுத்திய பின்னர், கம்ப்யூட்டரை ஷட் டவுண் செய்திடாமல் அல்லது ரீபூட் செய்திடாமல், இணைப்பை நீக்குவதனைக் குறிக்கும்.

11. அப்ளிகேஷன் புரோகிராம் ஒன்றினை, கம்ப்யூட்டரில் இன்ஸ்டால் செய்த பின், சிஸ்டம் முடங்கினாலோ, மிக மெதுவாக இயங்கினாலோ, உடனே சிஸ்டம் ரெஸ்டோர் பாய்ண்ட் மூலம், அந்த அப்ளிகேஷன் பதிந்த நாளுக்கு முன்னர் இருந்த நிலைக்குக் கம்ப்யூட்டரைக் கொண்டு வருவதுதான் சிறந்த வழியாகும்.

12. ஒரு பிழைச் செய்தியைக் காட்டிய பின்னர், கம்ப்யூட்டர் முடங்கிப் போனால், அதற்கான தொழில் நுட்ப வல்லுனரை அழைக்கும் முன், அந்த பிழைச் செய்தி என்ன என்று குறித்து வைத்துக் கொள்வது சிறந்த வழி முறையாகும். முடியுமானால், அதனை செலக்ட் செய்து காப்பி செய்து, ஒரு டெக்ஸ்ட் பைலில் பேஸ்ட் செய்திடலாம். இயலாவிட்டால், அதனைப் பார்த்து எழுதிக் கொள்ளலாம். அதுவும் முடியாவிட்டால், அப்படியே அந்த பிழைச் செய்திக்கான திரையை, ஒரு இமேஜாக சேவ் செய்து, பின்னர் அதனைத் திறந்து அதில் இருப்பதைப் பார்த்து, டெக்ஸ்ட் பைலாக சேவ் செய்து வைக்கலாம்.

13. FAT16, FAT32, மற்றும் NTFS ஆகியவை வெவ்வேறு வகையான பைல் கட்டமைப்புகளாகும்.

14. விண்டோஸ் என்.டி. (Windows NT) யில் உள்ள என். டி. என்பது New Technology என்ற சொற்களைக் குறிக்கிறது.

15. 1977 ஆம் ஆண்டு,பில் கேட்ஸ் ஒருமுறை, மிக வேகமாகக் காரை ஓட்டியதற்காகக் கைது செய்யப்பட்டார்.

16. விண்டோஸ் எக்ஸ்பியின் திரைத் தோற்றத்தில் மாற்றப்படா நிலையில் மிகப் பெரிய பச்சைப் புல்வெளி மேடும், பின்னணியில் மலையும் உள்ளதல்லவா? இதனை விண்டோஸ் பிளிஸ் (Bliss) எனப் பெயரிட்டுள்ளது. இந்த அழகான காட்சியைப் போட்டோவாக எடுத்தவர் பெயர் சார்ல்ஸ் ஓ ரியர் (Charles O'Rear). கலிபோர்னியாவில் சொனாமா கவுண்ட்டி என்ற இடத்தில் இந்த போட்டோ எடுக்கப்பட்டது. இதனைப் பின்னர் மைக்ரோசாப்ட் பணம் கொடுத்து விலைக்கு வாங்கி, தன் எக்ஸ்பி சிஸ்டத்தில் மாறா நிலையில் உள்ள டெஸ்க்டாப் இமேஜாகப் பயன்படுத்தியது.

பைல் ப்ராப்பர்ட்டீஸ்

பைல் ஒன்றின் தன்மைகளை நாம் அறிந்து கொள்ள பைல் ப்ராப்பர்ட்டீஸ் என்ற வசதியினைப் பயன்படுத்துகிறோம். பைலைத் தேர்ந்தெடுத்து, அதன் பெயர் மீது ரைட் கிளிக் செய்து விரியும் கட்டத்தில் Properties என்ற பிரிவில் கிளிக் செய்து அறிந்து கொள்ளலாம். சில கோப்புகளின் தன்மைகளை, கூறுகளைக் காணும்போதுதான், இதனை இப்படி அமைத்திருக்கலாமே என்று எண்ணலாம். எடுத்துக் காட்டாக, இதன் அளவை இன்னும் குறைத்திருக்கலாமே என்று சிந்திக்கலாம். அல்லது வேறு பார்மட்டில் சேவ் செய்திருக்கலாமே என்று திட்டமிடலாம். அப்படியானால், கம்ப்யூட்டர் நம்மிடம், இந்த பைலை இப்படிப்பட்ட கூறுகளுடன் சேவ் செய்யப் போகிறேன் என்று கேட்டால் எவ்வளவு வசதியாகவும், நன்றாகவும் இருக்கும். இந்த வசதியைக் கம்ப்யூட்டர் நமக்குத் தருகிறது. வேர்ட் தொகுப்பில் இதனை மேற்கொள்ளலாம். அந்த வழிகளைப் பார்ப்போம்.

Tools கிளிக் செய்து Options தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். இதில் Save டேபை அழுத்தவும். கிடைக்கும் விண்டோவில் Prompt for Document Properties என்ற இடத்திற்கு நேராக டிக் அடையாளம் ஏற்படுத்தி ஓகே கிளிக் செய்து வெளியேறவும். இனி ஒவ்வொரு டாகுமெண்ட் சேவ் செய்திடுகையிலும் உருவாகப் போகும் டாகுமெண்ட்டை உருவாக்கினார்கள் என்று உங்களைப் பற்றிய தகவல்கள் பதியப்படும். இது வேண்டாம் என்று நினைத்தால் அவை பதியப்படாமல் இருக்கும் வகையில் செட் செய்து கொள்ளலாம். Tools கிளிக் செய்து Options தேர்ந்தெடுத்து பின் Security டேபை அழுத்தவும். இதில் Remove personal information from the properties on save என்பதனைத் தேர்ந்தெடுத்து அதில் டிக் செய்து ஓகே அழுத்தி வெளியேறவும். இதே போல நீங்கள் ஒரு பைலைப் பார்த்த விஷயம் கம்ப்யூட்டரில் My Recent Documents என்பதில் இருக்கும் அல்லவா? இங்கும் நீங்கள் பைலைப் பார்த்த விஷயம் பதியப்படக் கூடாது என எண்ணினால் டாகுமெண்ட்டைத் திறந்து பின் Ctrl + O அழுத்தவும். கிடைக்கும் விண்டோவில் இடது பக்கம் கிடைக்கும் கட்டங்களில்

My Recent Documents அழுத்தவும். பின் கிடைக்கும் விண்டோவில் வலது பக்கம் Tools எனத் தெரியும் இடத்தில் அழுத்தி கீழ் விரியும் விண்டோவில் Clear Documents History என்பதில் டிக் ஏற்படுத்திப் பின் ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

அப்போதைய ஹிஸ்டரியை நீக்க

பலர் பயன்படுத்தும் கம்ப்யூட்டரினை நீங்களும் பயன்படுத்துபவராக இருந்தால், நீங்கள் அதில் பார்த்த இணைய தள முகவரிகளை மற்றவர்கள் அறிந்து கொள்ளாமல் இருக்க வேண்டும் என நீங்கள் விரும்பலாம். பயர்பாக்ஸ் பிரவுசரில் இதனை இரு வழிகளில் மேற்கொள்ளலாம். முதலாவதாக பிரைவேட் பிரவுசிங் என்னும் தற்போதைய வசதி மூலம், நாம் செல்லும் தளங்களின் முகவரிகள் பிரவுசரில் பதியப்படாமல் பார்த்துக் கொள்ளலாம். இன்னொரு வழி, ஹிஸ்டரியில் பதிந்துள்ள முகவரிகளை அழிப்பது. ஆனால் அன்றைக்கு, அந்த பயன்படுத்துதலில், நீங்கள் கண்ட தளங்களை எப்படி நீக்குவது?

பயர்பாக்ஸ் பிரவுசரில் நீங்கள் அப்போது மேற்கொண்ட தளங்கள் குறித்த தகவல்களை மட்டும் நீக்கும் வசதி தரப்பட்டுள்ளது. இந்த வசதி தரப்பட்டுள்ளதனைப் பலர் அறியாமல் உள்ளனர். Ctrl-Shift-Del அழுத்துவதன் மூலம், அப்போது பயன்படுத்திய தளங்களை நீக்கும் வசதி கிடைக்கிறது. அல்லது Tools > Clear Recent History எனச் சென்று இந்த வசதியினைப் பெறலாம். இந்த வழிகள் மூலம் கிடைக்கும் விண்டோவில், நீக்கப்படக் கூடிய அனைத்து தகவல் வகைகளும் கிடைக்கின்றன. இந்த தகவல்களின் மேலாகக் காட்டப்படும் நேரம், நம் வேலையை எளிதாக்குகிறது. இந்த மெனுவினைக் கீழாக இழுத்தால், கடந்த ஒரு மணி நேரத்தில், இரண்டு அல்லது நான்கு மணி நேரங்களில் என, நேரத்தினைக் கணக்கிட்டு, பார்த்த தளங்களை அழிக்கலாம்.

டெக்ஸ்ட் டைப்பிங் சாதனை

மொபைல் போனில் டெக்ஸ்ட் டைப் செய்வதிலும் தற்போது கின்னஸ் ரெகார்ட் பதிவு செய்யப்படுகிறது.

"The razor-toothed piranhas of the genera Serrasalmus and Pygocentrus are the most ferocious freshwater fish in the world. In reality they seldom attack a human." என்ற டெக்ஸ்ட்டை மெலிஸ்ஸா தாம்ப்சன் என்பவர் அண்மையில் 26 நொடிகளில் மொபைல் போனில் டைப் செய்து உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இதே டெக்ஸ்ட்டை டைப் செய்திட, முன்னர் 36 வினாடிகள் ஆனது. அந்த உலக சாதனையைத் தற்போது இவர் முறியடித்துள்ளார். இவர் சாம்சங் நிறுவனம் அண்மையில் இந்தியாவில் வெளியிட்ட கேலக்ஸி எஸ் என்ற போனை இதற்குப் பயன்படுத்தினார். இவர் இதற்காக எந்தப் பயிற்சியும் எடுக்கவில்லை. சாலையோரக் கடைகளில் பொருள் வாங்கச் சென்ற இவர், அங்கே கூட்டம் கூடியிருப்பதைப் பார்த்து என்னவென்று விசாரித்துள்ளார். இந்த சாதனை பற்றிக் கூறியவுடன், தானும் கலந்து கொண்டு, ஜஸ்ட் லைக் தட், டைப் செய்துள்ளார். அதுவே கின்னஸ் சாதனையாக எடுத்துக் கொள்ளப்பட்டு கின்னஸ் நிறுவனத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. தான் நாளொன்றுக்கு 40 முதல் 50 டெக்ஸ்ட் மெசேஜ் போன் மூலம் அனுப்புவதாகவும், அதுவே வேகத்தை வளர்த்துக் கொள்ள உதவியதாகவும் குறிப்பிட்டுள்ளார். என்ன! நீங்களும் இந்த சாதனையை முறியடிக்க முயற்சிக்கலாமே! இதே டெக்ஸ்ட்டை டைப் செய்து பாருங்களேன்.

கூகுள் அட்டாச்மெண்ட் - இழுத்துப்போடு

இமெயில் கடிதங்களோடு ஒட்டிக் கொண்டு வரும் இணைப்பு கோப்புகளை, நாம் டவுண்லோட் செய்து கொள்ள வேண்டும். அல்லது முதலில் சர்வரில் இருந்தவாறே, திறந்து படித்துத் தெரிந்து கொள்ளலாம். தேவைப்பட்டால் குறிப்பிட்ட ட்ரைவிற்கு மாற்றிக் கொள்ளலாம். அல்லது நேராகக் குறிப்பிட்ட ட்ரைவிற்கு டவுண்லோட் செய்து கொள்ளலாம்.

இந்த சுற்று வழிக்கு மாறாக, கூகுள் ஒரு வழி தருகின்றது. பைலை கூகுள் தன் ஆண்ட்டி வைரஸ் புரோகிராம் மூலம் சோதனை செய்து, வைரஸ் இல்லை என்றால் தான், அனுமதிக்கிறது. எனவே பைலை அப்படியே இழுத்து, நாம் விரும்பும் டைரக்டரியில் அல்லது போல்டரில் விட்டுவிடும் வசதியைத் தந்துள்ளது.

ஏற்கனவே இந்த வசதியை மெயிலுடன் இணைக்க தந்தது. பைலை அப்படியே இழுத்து, மெயிலுடன் அட்டாச் செய்திடலாம். பல பைல்களை அட்டாச் செய்திட முயற்சிக்கையில், இது நம்மில் பலருக்கு மிகப் பயனுள்ள, நேரம் மிச்சப்படுத்தும் செயலாக இருந்தது. இப்போது இணைக்கப்பட்டுள்ளவற்றை இழுத்துச் சென்று சேவ் செய்வதற்கு வசதி தரப்பட்டுள்ளது.

இது போல ஜிமெயில் பயன்படுத்துபவர்களுக்கு, இன்னும் பல பயனுள்ள வசதிகளைத் தரும் என எதிர்பார்க்கலாம்

பயர்பாக்ஸில் டெக்ஸ்ட் காப்பி

பயர்பாக்ஸ் பிரவுசரில் இணைய தளம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கையில், அதில் குறிப்பிட்ட தகவல் உள்ள டெக்ஸ்ட் வரிகளை ஆங்காங்கே காப்பி செய்திட வேண்டியதிருக்கும். இதற்கு ஒவ்வொரு இடமாக, அல்லது சில சில வரிகளாக காப்பி செய்து பேஸ்ட் செய்வதென்றால் நேரம் அதிகம் ஆகும். விண்டோஸ் எக்ஸ்புளோரரில் உள்ள பைல்களை வரிசையாக இல்லாமல், விட்டு விட்டு உள்ள பைல்களைக் காப்பி செய்கையில், கண்ட்ரோல் அழுத்தி நாம், தேர்ந்தெடுப்பது போல, இங்கும் ஒரு வழி தேவையாய் உள்ளது. அந்த வழியினைப் பார்க்கலாம்.பயர்பாக்ஸ் பிரவுசர் பதிப்பு 3 மற்றும் பின்னர் வந்தவற்றில், விண்டோஸ் எக்ஸ்புளோரரில் செய்வது போல, கண்ட்ரோல் கீ அழுத்தியவாறு, தள்ளி தள்ளி அமைந்திருக்கும் டெக்ஸ்ட்டைத் மவுஸ் மூலம் தேர்ந்தெடுக்கலாம். பின்னர் கண்ட்ரோல் + சி அழுத்தி காப்பி செய்து, அதன் பின்னர், மொத்தமாக ஏதேனும் டெக்ஸ்ட் எடிட்டரில் பேஸ்ட் செய்திடலாம்.

ஒரு சின்ன பெர்சனல் பிரேக்

ஷிப்ட் மற்றும் ஆல்ட் கீயுடன் வேர்ட் டேபிள் வரிசைகளை நகர்த்தும் டெக்னிக், மிகவும் வசதியான ஒன்று. பல வேலைகளை மிச்சப்படுத்துகிறது.

–சி. ஞானசேகரன், திருப்பூர்

தேதி மாற்றும் டிப்ஸில் குறித்துள்ள வேர்ட் டாகுமெண்ட் பீல்டுகள் பயன்பாடு குறித்து ஒரு சிறிய கட்டுரை தரவும்.

–டி. சல்மா பேகம், காரைக்கால்

ஆல்ட் கீயுடன் உள்ள பயன்பாடுகள் அனைத்தும் புதுமையாகவும், வசதியாகவும் உள்ளன. கீ போர்ட் ஷார்ட்கட் கீகளைத் தெரிந்து கொண்டாலே, பல செயல்பாடுகள் நம் கைகளில் வந்துவிடுகிறது.

எல்லா பிரவுசர்களுமே சில வேளைகளில் முடங்கிப் போகின்றன. இந்தக் குறை இல்லாத பிரவுசர் எது எனச் சொல்லுங்களேன்.

–எஸ். ராமநாதன், சென்னை

அனைத்து பாப்புலர் பிரவுசர்களின் ப்ளஸ் மற்றும் மைனஸ் குறித்து எழுதியது அரிய தகவல்களைத் தருவதாய் உள்ளது.

–கா. பொன்னீஸ்வரன், சென்னை

விண்டோஸ் 7 சிஸ்டம் மைக்ரோசாப்ட் தந்த நல்லதொரு விஷயம் என்றால், அது குறித்த தங்களின் தகவல்கள் அதிக பட்ச வசதிகளுக்கு வழி காட்டுகின்றன. வாரந்தோறும் புதிய சிஸ்டம் பற்றிய தகவல்களைத் தரவும்.

–மா. உமா மகேஸ்வரன், திருத்தணி

விண்டோஸ் சிஸ்டத்தில் தரப்படும் சிஸ்டம் எழுத்துக்களின் சைஸைப் பெரிதாக்கலாம் என்ற தகவலைத் தங்கள் மலர் படித்துத் தான் தெரிந்து கொண்டேன். நன்றி.

–சு. ராஜ் பிள்ளை, கல்லுப்பட்டி

வேர்ட் மற்றும் எக்ஸெல் டிப்ஸ் ஏன் சார் குறைகிறது? சிலருக்கு அவை அத்துபடியாக இருக்கலாம். என் போன்ற வயசானவர்களுக்கு இந்த வகையில் நீங்கள் தான் ஆசான். தயவுசெய்து எந்த இஷ்யூவிலும் விட்டுவிட வேண்டாம்.

–கா. யூசுப், மதுரை

ரீசைக்கிள் பின்னுக்கு செல்லாமல் பைல் அழித்தால் ஆபத்தில்லையா? ஒரு சிலரின் கேள்விக்காக, இந்த ஆபத்தான வழிகளை எல்லாம் காட்டாதீர்கள்.

–கா. ஆப்ரஹாம், தேனி

மொபைல் போன் குறித்த தகவல்களுடன், அவை எங்கு கிடைக்கிறது என்ற முகவரியும் தந்தால், பயனுள்ளதாய் இருக்கும்.

–எஸ். சந்தீப் ராஜ், சென்னை

விண்டோஸில் என்ன அற்புத வசதிகள் என தனிக் கட்டுரை. எல்லாமே அற்புதம் தானே. கூடுதல் வசதிகளையும் குறிப்பிட்டு எழுதுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

–எலக்ட்ரானிக்ஸ் குரூப் மாணவர்கள், மதுரை பாலிடெக்னிக் கல்லூரி, மதுரை

பிளாஷ் ட்ரைவ் இப்போது அதிக டேட்டா கொள்ளும் வகையில் வருவதால், பாதுகாப்பு மற்றும் பயனுள்ள பிளாஷ் ட்ரைவ் புரோகிராம்கள் குறித்து தொடர்ந்து பப்ளிஷ் பண்ணவும்.

–கே. என். நந்த கோபாலன், புதுச்சேரி

கம்ப்யூட்டரில் பொழுது போக்கும் வழிகள் குறித்து, அதற்கான சாப்ட்வேர் கிடைப்பது குறித்து தகவல்களைத் தரலாமே!

–தே. ஜெயந்தி, கோயம்புத்தூர்

கம்ப்யூட்டரில் காசு அதிகம் செலவாகும் விஷயம் பிரிண்டர் தான். மிகவும் பொறுப்பாக இது குறித்த தகவல்களைத் தந்து, அச்சில் பணத்தை வீணாகச் செலவழிப்பவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளீர்கள். நல்ல முயற்சி. பாராட்டுக்களும் நன்றியும்.

–டி.தேவநேசன், அச்சக நிர்வாகி, அருப்புக்கோட்டை

திருட முடியாத ஐபோன்



ஒருவருக்கு உரிமையான ஐ–போனை அடுத்தவர் பயன்படுத்த முடிந்தால், கண்டறிந்து இயங்காமல் இருக்கக் கூடிய தொழில் நுட்பத்தினை ஆப்பிள் நிறுவனம் வடிவமைத்து, அதன் காப்புரிமைக்கு மனுச் செய்துள்ளது. இந்த தொழில் நுட்பம் ஐ போன் ஒன்றின் உரிமையாளரின் முக அமைப்பு, குரல் மற்றும் இதயத் துடிப்பினை அளந்து அறிந்து கொள்கிறது. இவற்றின் அடிப்படையில் பல செயல்பாடுகளை, ஆப்பிள் நிறுவன சர்வர் வேறு மேற்கொள்கிறது.

எவரும் பயன்படுத்த முயற்சிக்கையில் போனின் செயல்பாட்டை முடக்குகிறது. திருட்டுத்தனமாகப் பயன்படுத்துகையில், பயன்படுத்தும் இடத்தினை அறிந்து கொண்டு பதிந்து கொள்கிறது. அனுமதிக்கப்பட்ட கூடுதல் வசதிகளை மட்டுமே பயன்படுத்த வழி தருகிறது. ஐபோனின் வரையறைகளை திருட்டுத்தனமான சாப்ட்வேர் (ஜெயில் பிரேக்கிங்) மூலம் யாரேனும் மாற்றி இருந்தால் உடனடியாகக் கண்டறிந்து பயன்பாட்டினை முடக்குகிறது.

ஆனால் இந்த தொழில் நுட்பம் வாடிக்கையாளர்களின் தனி நபர் உரிமையில் தலையிடுவதாக சிலர் கண்டித்துள்ளனர்.

சோனி எரிக்சன் ஸைலோ

இந்தியாவில் தன் ஸைலோ மொபைல் போனை விற்பனைக்கு சோனி எரிக்சன் நிறுவனம் கொண்டு வந்துள்ளது. இது ஒரு வாக்மேன் போன். முதல் முறையாக எப்.எல்.ஏ.சி. (FLAC) ஆடியோ பார்மட்டை சப்போர்ட் செய்திடும் சோனி மொபைல் இதுதான் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் நவீன வாக்மென் 4 இணைக்கப்பட்டுள்ளது.

2.6 அங்குல வண்ணத்திரை, 260 எம்பி உள் நினைவகம், மைக்ரோ எஸ்.டி. கார்ட் மூலம் 16 ஜிபி வரை மெமரியை அதிகப்படுத்தும் வசதியுடன் இந்த போன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 2ஜி மற்றும் 3ஜி சேவைகளைத் தரும் திறன் கொண்டது.

A2DP இணைந்த புளூடூத், 3.15 எம்.பி. திறன் கொண்ட டிஜிட்டல் கேமரா (பிளாஷ் இல்லை) ஸ்டீரியோ எப்.எம். ரேடியோ ஆகியன உள்ளன.

இது ஒரு பட்ஜெட் போன் என்பதால், ஜி.பி.எஸ். மற்றும் வை–பி சப்போர்ட் இல்லை. கருப்பு, வெள்ளி மற்றும் இளஞ்சிகப்பு வண்ணங்களில் வந்திருக்கும் இந்த போனின் விலை ரூ. 8,500 என்ற அளவில் உள்ளது.

ஆஸ்கார் குவெர்ட்டி டூயல் சிம்

தற்போது வெளியாகும் பல மொபைல் போன்கள், இரண்டு சிம் பயன்பாட்டுடன், குவெர்ட்டி கீ போர்டையும் கொண்டுள்ளன. பட்ஜெட் விலையிலும் பல போன்கள் வந்துள்ளன. இவை இளைஞர்களைக் குறி வைத்தே வசதிகளைக் கொண்டுள்ளன. இலவச எஸ்.எம்.எஸ். வசதிகள் கிடைப்பதால், பல இளைஞர்கள் ஒரே அறையில் அமர்ந்து வேலை பார்த்துக் கொண்டிருந்தாலும், தங்களுக்குள் எஸ்.எம்.எஸ். வழியாகத் தங்களுக்குள் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது இன்றைய நடைமுறையாக இருந்து வருகிறது. இதற்கு வசதியாகத்தான், குவெர்ட்டி மற்றும் அகரவரிசைப்படியான கீ போர்டுகளுடன் போன்கள் வந்துள்ளன. இந்த சந்தையில், அண்மையில் ஆஸ்கார் நிறுவனம், ஆஸ்கார் ஜே4 என்ற பெயருடன், மொபைல் ஒன்றை விற்பனைக்கு வெளியிட்டுள்ளது. இதன்



விலை ரூ.2,749 எனக் குறியிடப்பட்டுள்ளது. இதனுடைய வடிவமைப்பு அனைவரையும் கவர்கின்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு சிம் பயன்பாடு, ஒரே கீயில் ரெகார்ட் செய்யும் வசதியுடனான எப்.எம். ரேடியோ இயக்கம், தானாக அழைப்புகளின் நேரத்தைக் காட்டும் வசதி, 2 ஜிபி மெமரி கார்டு, கேமரா, எம்பி3 மற்றும் வீடியோ பிளேயர், புளூடூத், டார்ச், 8 ஜிபி வரை மெமரி அதிகப்படுத்தக் கூடிய மெமரி கார்ட் வசதி, ஜி.பி.ஆர்.எஸ். என தேவைப்படும் அனைத்து அம்சங்களும் கொண்டதாகவும், பட்ஜெட் விலையிலும் உள்ளது.

வெர்ஜின் மொபைல் + கெட்ஜார் ஒப்பந்தம்

மொபைல் சேவை வழங்குவதில் பல்வேறு புதிய முயற்சிகளை மேற்கொண்டு வரும், வெர்ஜின் மொபைல் நிறுவனம், மொபைல் போன்களுக்கான கேம்ஸ் மற்றும் பல அப்ளிகேஷன் சாப்ட்வேர் வசதிகளை வழங்கி வரும் கெட்ஜார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. ஏறத்தாழ 70,000க்கும் மேற்பட்ட கேம்ஸ், கல்வி, சோஷியல் நெட்வொர்க்கிங், பொழுதுபோக்கு, நிதி நிர்வாகம், உணவு, உடல்நலம், தேடுதல் சாதனம் மற்றும் லைப்ஸ்டைல் போன்ற பல பிரிவுகளில் அதிக எண்ணிக்கையில் கெட் ஜார் அப்ளிகேஷன்களைக் கொண்டுள்ளது.

இவற்றை ஆண்ட்ராய்ட், பிளாக்பெரி, விண்டோஸ் மொபைல், ஜாவா மற்றும் சிம்பியன் மொபைல் ஆப்பரேட்டிங் சிஸ்டங்களில் இயக்கலாம்.

> செஞ்சிஷ் உள்ளதுமைக் ஏமன்மையாக ஏமாறப்பலிஸ் பேசவும்.

200க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ளவர்கள்,இந்த நிறுவனம் வழங்கும் வசதிகளைப்பெற்று பயன்படுத்தி வருகின்றனர். இந்தியாவில் இதனைப் பெற்றுத் தரும் ஒப்பந்தத்தினை வெர்ஜின் மொபைல் நிறுவனம் தன் வாடிக்கையாளர்களுக்காகப் பெற்றுள்ளது. வெர்ஜின் மொபைல் சந்தாதாரர்கள் என்ற முகவரியில் உள்ள தளம் சென்று, தங்களுக்குத் தேவையான கேம்ஸ் மற்றும் அப்ளிகேஷன்களை டவுண்லோட் செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒரு கேபி டேட்டாவிற்கு ஒரு பைசா என்ற அளவிலேயே கட்டணம் வசூலிக்கப்படும்.

> பிறருடன் உரையாட கையில் மொபைல் அழைப்பு வந்தால் வாய்ஸ் மெயிலுக்கு அனுப்பவும்.

மைக்ரோமேக்ஸ் க்யூ7

பயன்படுத்த மிக வசதியான வடிவமைப்பு, எளிதாக வழி காட்டும் பயனாளர் இடைமுகத் தொகுப்பு, ஆடியோ மற்றும் வீடியோ பைல் இயக்கத் திறன், துல்லியமான இசை வெளிப்பாடு, மிக மிக எளிமையுடன் தருகிறது. ஆடியோ மற்றும் வீடியோ மிகவும் துல்லியமான ஒலியுடனும், காட்சியுடனும் அமைந்துள்ளது. எப்.எம். ரேடியோ பயன்பாடும் இதே சிறப்புடன் இருக்கிறது.

எளிதாக அமைத்துக் கொள்ளும் வகையில் வை–பி இணைப்பு, கேமரா எனப் பல நல்ல அம்சங்களுடன் வந்துள்ளது இரண்டு சிம் இயக்கம் கொண்ட மைக்ரோமேக்ஸ் க்யூ7.

கீ பேடின் பின்புற வெளிச்சம் சில வேளைகளில் சூரிய வெளிச்சத்தில் கீ பேட் பயன் படுத்துவதற்கு இடையூறாக உள்ளது.

100 கிராம் எடையில், நல்ல தெளிவான சதுர வடிவிலான பார் வகை போனாக இது உரு பெற்றுள்ளது. முந்தைய மைக்ரோமேக்ஸ் போன்களைக் காட்டிலும் இதன் திரை வெளிப்பாடு தெளிவாகவும், பளிச் என்றும் உள்ளது. மைக்ரோ எஸ்டி கார்ட் ஸ்லாட், பவர் ஸ்லாட், யு.எஸ்.பி. போர்ட் ஆகியவை பயன்படுத்த எளிதான இடத்தில் அமைந்துள்ளன.

இதில் உள்ள ஜாவா ஆப்ப ரேட்டிங் சிஸ்டம், பயன் படுத்து வதனையும், மெமனு மாற்றத்தினையும்

> லிப்ட், அறை, அலுவலக மருத்துவமனை ஹோட்டல், கூட்டங்களில் மொபைலில் பேசுவதைத் தவிர்க்கவும்.

ஆனால் பதிவு செய்யக் கூடிய வசதி தரப்படாதது சற்று ஏமாற்றமே.

வீடியோவைப் பொறுத்தவரை எம்பி4, 3ஜிபி, ஏ.வி.ஐ. மற்றும் எப்.எல்.வி பார்மட்டுகளைக் கையாள்கிறது.

இரண்டு அடி சுற்றளவில் ஏற்படும் ஒலியினை மிகத் தெளிவாகப் பதிவு செய்கிறது. வழக்கமான அலாரம், உலக கடிகாரம், செயல் மேற்கொள்ள நினைவுபடுத்தும் பட்டியல் அமைத்தல், இ–புக் ரீடர், ஸ்டாப் வாட்ச், திருட்டு தடுப்பு, அழைப்பு மற்றும் எஸ்.எம்.எஸ். பிளாக் லிஸ்ட் ஏற்படுத்துதல் ஆகிய வசதிகளும் தரப்பட்டுள்ளன.

பட்ஜெட் விலை போனாக இருந்தாலும், வை–பி இணைப்பு வசதி தரப்பட்டுள்ளதுதான் இந்த போனின் கூடுதல் சிறப்பாகும். வை–பி இல்லாத இடங்களில் EDGE/GPRS/WAP சேவைகளைப் பயன்படுத்தலாம். இதில் தரப்பட்டுள்ள பிரவுசருக்குப் பதிலாக, ஆப்பரா பிரவுசரைப் பயன்படுத்துவது சிறப்பான பயன்பாட்டினைத் தரும்.

இதில் தரப்பட்டுள்ள பேட்டரி 4.5 மணி நேரம் தொடர்ந்து பேச மின்சக்தி தரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு சிம் பயன்பாட்டில், மேலே குறிக்கப்பட்டுள்ள சிறப்பான வசதிகளுடன், இந்த போனின் விலை ரூ. 4,800 எனக் குறிக்கப்பட்டுள்ளது இதன் இன்னொரு சிறப்பாகும்.

கேள்வி பதில்

கேள்வி:

என் நண்பர் தன்னுடைய வேர்டில் உருவான பைலை காப்பி செய்து அனுப்பினார். ஆனால் என் கம்ப்யூட்டரில் உள்ள வேர்டில் திறக்க மறுக்கிறது. இது பழைய வேர்ட் 2003. நண்பரிடம் உள்ளது வேர்ட் 2007. என்ன தீர்வு? நண்பர் வெளிநாட்டுக்கு வேறு சென்றுவிட்டார்.

–கே.ஜானகிராமன், புதுச்சேரி

பதில்: நண்பர் வெளிநாடு போனால் என்ன! வேர்ட் 2007 உள்ள ஒரு கம்ப்யூட்டரில், நண்பர் கொடுத்த பைல்களைத் திறக்கவும். பின் அதே வேர்ட் தொகுப்பில் Save As கட்டளை கொடுத்து, பெயர் விண்டோ உள்ள இடத்தில் வலது பக்கம் உள்ள கீழ் அம்புக் குறியினை அழுத்தவும். அதில் வேர்ட் 2003 மற்றும் முந்தைய வேர்ட் பார்மட்டில் சேவ் செய்திட ஆப்ஷன் தரப்பட்டிருக்கும். இதில் ".doc" என்ற துணைப்பெயருடன் பைலை சேவ் செய்திட ஆப்ஷன் கிடைக்கும். இதனைத் தேர்ந்தெடுத்து, நீங்கள் புரிந்து கொள்ளும்படி ஒரு பெயர் கொடுத்து சேவ் செய்திடவும். பின் இந்த பைலை காப்பி செய்து, உங்கள் வீட்டுக் கம்ப்யூட்டரில் பயன்படுத்தவும். நீங்கள் நன்றாகக் கவனித்திருந்தால், வேர்ட் 2007 தொகுப்பில் சேவ் செய்யப்பட்ட பைலின் துணைப் பெயர் ".docx" என்று இருக்கும்.

கேள்வி: நான் பத்திரிக்கை ஒன்றுக்கு டாகுமெண்ட் தயாரித்து கொடுக்கிறேன். வழக்கமான ஐந்து பக்க டாகுமெண்ட்டில், இரண்டு மற்றும் மூன்றாம் பக்கங்களில் மட்டும் டெக்ஸ்ட் இரண்டு காலங்களில் வர வேண்டும். இதனை மட்டும் எப்படி செட் அப் செய்வது?

–சி.நாகராஜன், அருப்புக் கோட்டை

பதில்: டாகுமெண்ட்டைத் திறந்து, எந்த டெக்ஸ்ட்டை, காலம் பத்திகளில் அமைக்க வேண்டுமோ, அதனைத் தேர்ந்தெடுக்கவும். Format மெனுவில் இருந்து Column என்பதைத் தேர்ந்தெடுக்கவும். இப்போது Column Dialog Box கிடைக்கும். Number of Columns பீல்டில், எத்தனை காலம் என்பதனைக் குறிப்பிடவும். அடுத்து Apply To பாக்ஸில், Selected Text என்பது தேர்ந்தெடுப்பதனை உறுதி செய்திடவும். பின்னர் OK கிளிக் செய்து வெளியேறவும். இனி நீங்கள் விரும்பிய டெக்ஸ்ட் விரும்பியபடி, காலம் பத்திகளில் அமைக்கப்பட்டிருக்கும்.

கேள்வி: இன்டர்நெட்டில் பிரவுஸ் செய்கையில் சில வேளைகளில் முழுத் திரையையும் அதற்கு மட்டும் பயன்படுத்த விரும்பி, உங்கள் டிப்ஸ் படி சில கீகளை அழுத்திப் பெறுகிறேன். ஆனால் கீழே இருக்கும் டாஸ்க் பாரினை மறைக்க என்ன செய்யலாம்? எனக்கு முழுத் திரையும் வேண்டும். என்னுடைய சிஸ்டம் எக்ஸ்பி.

–டி.ஆர். சோமு, விழுப்புரம்

பதில்: அதனையும் மறைக்கலாம். டாஸ்க்பாரில் காலியாக உள்ள இடத்தில் ரைட் கிளிக் செய்திடவும். எழுந்து வரும் மெனுப்பட்டியலில் Properties என்பதில் இடது கிளிக் செய்திடவும். இப்போது ஒரு டயலாக் பாக்ஸ் கிடைக்கும். இதன் தலைப்பு Taskbar and Start Menu

Properties என்று இருக்கும். இதில் இரண்டு டேப்கள் தரப்பட்டிருக்கும். இதில் Taskbar என்ற டேப்பை செலக்ட் செய்து கிளிக் செய்திடவும். கிடைக்கும் டயலாக் பாக்ஸில் ஐந்து விருப்பத் தேர்வுகள் கிடைக்கும். மூன்றாவதாக Keep the taskbar on top of windows என்று ஒன்றைப் பார்க்கலாம். இதன் முன் உள்ள பாக்ஸில் உள்ள டிக் அடையாளத்தை எடுத்துவிட்டு, பின்னர் Apply என்பதில் கிளிக் செய்திடவும். அதன் பின் OK கிளிக் செய்திடவும்.

இப்போது சென்று பாருங்கள். நீங்கள் டெஸ்க் டாப்பில் இருந்தால் தான், டாஸ்க்பார் உங்களுக்குத் தோற்றமளிக்கும். நீங்கள் பிரவுசரைப் பயன்படுத்தும் போதோ, கடிதம் எழுதும் போதோ, டாஸ்க்பார் தெரியாது.

கேள்வி: கிகி பைட் என்று ஒரு அளவு உள்ளதா? இது மிகவும் துல்லியமாக பைட்ஸ் அளவைக் கூறுவதாக என் உயர் அதிகாரி கூறுகிறார். சற்று தெளிவு படுத்தவும்.

–கா. தமிழ்ச் செல்வி, மதுரை

பதில்: உங்கள் கேள்வியைப் படித்த பலருக்கு, பெயர் எப்படி துல்லியம் இல்லாமல் இருக்கும்? அதென்ன கிகி பைட் என்ற கேள்விகளெல்லாம் மனதில் ஓடும்? இல்லையா? இதோ கீழே படியுங்கள்.

கம்ப்யூட்டரைப் பொறுத்தவரை, கிலோ பைட், மெகா பைட், கிகா பைட், டெரா பைட் என்பது எல்லாம் நாம் அறிவோம். இவை முறையே, 1024 பைட்ஸ், 1024 கிலோ பைட்ஸ், 1024 மெகா பைட்ஸ் மற்றும் 1024 கிகா

பைட்ஸ் என்ற அளவுகளைக் குறிக்கின்றன. ஆனால் இது சரியான பெயர் இல்லையே! கிலோ என்பது 1000 என்ற எண்ணைத்தானே குறிக்கும். பின் எப்படி 1024க்கு கிலோ எனப் பெயர் சூட்டலாம் என்பது மனதில் ஏற்படும் கேள்வி. இதனால் தான் இந்தப் பெயர்களெல்லாம் துல்லியமான பெயர் இல்லையே என்பது நம் சந்தேகம். இது உண்மைதான். ஹார்ட் டிஸ்க் விற்பவர்கள் எல்லாம், டிஸ்க்கினை 2ன் பவர் எண்ணில் கூறாமல், ஆயிரத்திலேயே கூறி வந்ததால், இந்த பெயர்கள் நிலைத்துவிட்டன.

இந்த குழப்பமான, சற்று சரியற்ற பெயர்களை மாற்றிச் சரியான ஒரு பெயரைக் கொடுக்க, எடை மற்றும் அளவுகளுக்கான பன்னாட்டு International Bureau of Weights and Measures அமைப்பு புதிய பெயர்களை உருவாக்கி வழங்கியுள்ளது. 1024 பைட்ஸ் அடங்கியது ஒரு கிபி பைட் (kibibyte (KiB), 1024 கிபி பைட்ஸ் ஒரு மெபி பைட் (a mebibyte (MiB), இதே போல கிகி பைட் (gibibyte) மற்றும் டெபிபைட் (tebibyte) உருவாக்கப்பட்டுப் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன.

கேள்வி: நான் விண்டோஸ் 7 பயன்படுத்தத் தொடங்கி உள்ளேன். இந்த சிஸ்டம் பயன்படுத்தினால், கம்ப்யூட்டரில் உள்ள ஹார்ட் டிஸ்க்கினை நாம் மாதம் ஒருமுறை கட்டாயம், டிபிராக் செய்திட வேண்டும் எனக் கூறுகிறார்களே, இது உண்மையா?

– ஆர். நம்பி ராகவன், கோயமுத்தூர்

பதில்: முற்றிலும் தவறு. கம்ப்யூட்டரின் ஹார்ட் ட்ரைவினைக் கட்டாயமாக டிபிராக் செய்திட வேண்டுமா என்ற கேள்வி பல ஆண்டுகளாகப் பட்டிமன்றத்திற்கு உரியதாகவே இருந்து வருகிறது. ஆனால் விண்டோஸ் விஸ்டா மற்றும் விண்டோஸ் 7 இயக்கத்தில், நீங்கள் ஹார்ட் டிஸ்க்கினை டிபிராக் செய்திடவே தேவையில்லை. ஏனென்றால், சிஸ்டம் தானாகவே உங்கள் ஹார்ட் டிஸ்க்கினை, டிபிராக் செய்திடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்கள் சிஸ்டத்தில் உள்ள Task Scheduler ஐ கிளிக் செய்து பாருங்கள். இதில் ஒரு வேலையாக (Task) Scheduled Defrag என்று இருக்கும். அதில் Wednesday at 1:00 a.m என கிழமையும் நேரமும் குறிக்கப்பட்டிருக்கும். இந்த நேரத்தில் உங்கள் கம்ப்யூட்டர் இயக்கப்படாமல் இருந்தால், கம்ப்யூட்டர் தானாகவே அடுத்த முறை, இயக்கப்படுகையில் டிபிராக் செயல்பாட்டினை மேற்கொள்ளும்.

கேள்வி: சிஸ்டம் ட்ரே – நோட்டிபிகேஷன் ஏரியா இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

– டி.சியாமளா சுரேஷ், கூனூர்

பதில்: நம்மில் பலர் சிஸ்டம் ட்ரே (System Tray) என அழைக்கப்படும் இடத்தை, மைக்ரோசாப்ட் நோட்டிபிகேஷன் ஏரியா (Notification Area) என அழைக்கிறது. Systray.exe என்ற பைல் இதற்குக் காரணம் என்பதால், இதனைப் பலரும் சிஸ்டம் ட்ரே என அழைக்கின்றனர். இது பின்னணியில் இயங்கி, நோட்டிபிகேஷன் ஏரியாவினை நிர்வகிக்கிறது என்பதே சரி.

கேள்வி: என் குடும்பத்தினரை டிஜிட்டல் கேமராவில் படம் எடுத்த போது, படம் பிடிக்கப்பட்டவர்கள் நன்றாக இருந்தாலும், பின்புலம் படு மோசமாக அமைந்துவிட்டது. இதனை எப்படி சரி செய்வது?

– சி.நாகராஜ், விக்கிரவாண்டி

பதில்: நீங்கள் படம் எடுத்த கேமராவில் இதனைச் சரி செய்திடும் வசதி இல்லை. படத்தை கம்ப்யூட்டருக்கு மாற்றவும். பின்னர், அடோப் போட்டோ ஷாப் சாப்ட்வேரில் இந்த படத்தைத் திறந்து, அதில் உள்ள டூல்கள் மூலம் பேக் கிரவுண்டில் உள்ளதை நீக்கி, நீங்கள் விரும்பும் பின்புலத்தை இணைக்கலாம்.

கேள்வி: நல்ல பழைய கர்நாடக சங்கீத பாடல்களைத் தரும் இணைய தள முகவரி ஒன்றைத் தரவும்.

– ஆ. காமாட்சி அம்மாள், சென்னை

பதில்: பல தளங்கள் உள்ளன. கூகுள் சாதனத்தில் தேடிப் பெறலாம். எனக்குப் பிடித்த, மிகப் பெரிய தளம் http://www.sangeethapriya .org/ என்ற முகவரியில் இயங்குகிறது.